# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No.** 7/2020

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பஷீர் அகமது **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of October 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 15 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 11.12.2009 ம் தேதி வாதியும், பிரதிவாதிகளும் சேர்ந்து பிராது தபசில் சொத்தை பொறுத்து பிறப்புவித்துக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தின் அசல் வா.சா.ஆ. 1 ஆகும். 2) பிராது தபசில் சொத்தான சர்வே எண். 91/7 ல் உள்ள 57 சென்ட் இடத்தை பொறுத்தும், இதர சொத்துக்களை பொறுத்தும் 1ம் பிரதிவாதியின் சகோதரிகள் செங்கோட்டை உரிமையியல்

நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்த OS No. 127/2006 வழக்கின் பிராது (வாதியிடம் 1 ம் பிரதிவாதி கொடுத்தது) வா.சா..ஆ 2. ஆகும். 3) 17.11.2012 ம் தேதி வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய நோட்டீசின் அலுவலக நகல் வா.சாஆ. 3 ஆகும். 4) 20.11.2012 ம் தேதிபிரதிவாதி மேற்படி நோட்டீசை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டையின் அசல் வா.சா-ஆ. 4 ஆகும். 5) 20.11.2012 ம் தேதி 2 ம்பிரதிவாதி மேற்படி நோட்டீசை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டையின் அசல் வா.சா.ஆ.5 ஆகும். 6) 05.01.2008 மேற்படி OS No. 127/2006 வழக்கில் பிறந்த தீர்ப்புரை (வாதியிடம் 1 ம் பிரதிவாதி கொடுத்தது) நகல் வா.சாஆ. 6 ஆகும். 7) மேற்படி தீர்ப்பின் பேரில் 1 ம் பிரதிவாதி தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அப்பீல் மெமோரண்டத்தின் நகல் வா.சா.ஆ.7 ஆகும். 8) மேற்படி OS No. 127/2006 வழக்கில் வாதிகள் செங்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் சொத்துப்பிரிவினை கமிஷனர் நியமனம் செய்யக்கோர் IA Noo 458/2008 ல் தாக்கல் செய்த கமிஷன் மனு மற்றும் அபிடவிட்டின் நகல் வா.சா-ஆ. 8 ஆகும். 9) 04.12.2019 ம் தேதி வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய நோட்டீசின் அலுவலக நகல் வா.சா-ஆ. 9 ஆகும். 10) 05.12.2019 ம் தேதி 1 ம் பிரதிவாதி மேற்படி நோட்டீசை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டையின் அசல் வா.சாஆ.10 ஆகும். 11) 05.12.2019 ம் தேதி 2 ம்பிரதிவாதி மேற்படி நோட்டீசை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டையின் அசல் வா.சாஆ.11 ஆகும். 12) பிரதிவாதிகள் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனுவின் நகல் வா.சா-ஆ.12 ஆகும். 13) பிரதிவாதிகள் செங்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனுவின் நகல் வா.சா.ஆ. 13 ஆகும். 14) 26.12.2019 வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிராது தபசில் சொத்தின் யாதொரு கட்டுமானங்களும் கட்டக்கூடாது என்று கோரி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய நோட்டீசின் அலுவலக நகல் வா.சா.ஆ. 14 ஆகும். 15) வாதியின் ஆதார் அட்டையின் நகல் வா.சா-ஆ.15 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi